## பாராளுமன்ற வெளியீடு தொடர் 183
## மாவட்ட செயலகம் - திருகோணமலை.

| | பொதுக்கணக்கு குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | ஒரு பாவிக்கப்படாத வாகனம் பாவிக்கப்படாத திகதியில் இருந்து 06 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்குள் அகற்றப்படவில்லை. | பாவிக்கப்படாத வாகனங்களின் பதிவு உரிமை மாவட்ட செயலகத்திடம் இல்லாததால்,அந்த வாகனங்களின் பதிவு உரிமைகளைக் கொண்ட சரியான அமைச்சுக்கள் /திணைக்களங்கள் சில சமயங்களில் உரிமையை மாற்றும் நடவடிக்கைகள் தாமதமானது, எனினும் ,மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் பாவிக்கப்படாத வாகனங்களை உரிமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | பாவிக்கப்படாத வாகனங்களின் பதிவு உரிமைகள் திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு முறைப்படி மாற்றப்பட்டுள்ளது. அந்த வாகனங்களை அகற்றும் பணியை இந்த ஆண்டுக்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 02. | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை மீள்பரிசோதனை செய்யப்படவில்லை. | நிலவிய எரிபொருள் நெருக்கடி மற்றும் பாவனைக் குறைவினால் வாகனங்களின் எரிபொருள் சோதனைகள் முன்னைய ஆண்டுகளில மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் அந்த செயற்பாடுகளை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. | எரிபொருள் எரிவதை சரிபார்க்க ஒரு வாகனம் குறைந்தது 100 கி.மீ ஓடவேண்டும். நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடு காரணமாக எந்த வாகனமும் அவ்வாறு செய்யப்படவில்லை.இருப்பினும் அப்படி ஓடும் வாகனங்கள்எரிபொருள் நுகர்வுக்கு சோதனை செய்யப்படும். |
| 03. | ஒரு வருடத்திற்கு மேலாக உள்ள கடன் நிலுவைகள் தீர்க்கப்படவில்லை. | அத்தகைய 05 கடன்கள் இருந்தன.அவர்களில் இருவர் மாகாண சபைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் என்பதுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் பதவி வெறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அதிகாரிகளின் கடன் மிகுதியை மாதந்தோறும் அறவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டிலுள்ள பி.சரவணபவனின் கடன் நிலுவை தொகை குறித்து சம்பந்தப்பட்ட துாதரகத்தின் மூலம் உரிய கடன் நிலுவையை அறவிட தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 27.10.2022 அன்று சட்டமாஅதிபர் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மாகாண சபைக்கு மாற்றப்பட்ட அந்த அதிகாரிகளின் நிலுவைத் தொகை முழமையாக அறவிடப்பட்டுள்ளது.<br><br>இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் பதவி வெறிதாக்கப்பட்டவா்களின் நிலுவைத் தொகை அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்ததிலிருந்து மாதந்தோறும் அறவிடப்படுகிறது.<br><br>வெளிவிவகார அமைச்சு எடுத்த நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை.<br><br>திரு.பி. சரவணபவன் வெளிநாடு சென்றுள்ளதால் இலங்கையில் நிரந்தர /சரியான குடியிருப்பு முகவரி தெரிவிக்கப்படும் வரை சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என நட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. திருகோணமலை சிரேஷ்ட |

| | பொதுக்கணக்கு குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | 16.11.2022 அன்று நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் பொலிஸாா மூலம் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பொலிஸ் அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. |
| 04 | சேகரிக்கப்பட்ட வருவாய் அந்தந்த ஏற்பாடுகளின் அடிப்படையில் திருப்பிச் செலுத்தப்படவில்லை. சேகரிக்கப்பட்ட வருவாய்கள் நேரடியாக வரவு வைக்கப்படவில்லை அல்லது ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்குள் வருவாய் கணக்குகளுக்கு அனுப்பப்படவில்லை. | மாவட்ட செயலக வளாகத்திற்கான துப்பரவு சேவைகள் தனியார் நிறுவனத்தால் பெறப்பட்டதால் வருடாந்த மதிப்பீட்டில் இருந்து அதற்கான தொகையை செலுத்துவதற்கு போதிய ஏற்பாடுகள் இல்லாததால் இந்த அலுவலக வளாகத்தில் உள்ள மற்ற அலுவலகங்கள் வழங்கிய நன்கொடைகள் துப்பரவு சேவைக்கான கட்டணமாக இருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வாளர் நாயகத்தின் வழிகாட்டுதலின் படி இது நிறுத்தப்பட்டது. | கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டபடி தொடர்புடைய வருமானம் தற்போது அறவிடுவது நிறுத்தப்பட்டுள்ளது. |
| 0 5 | நிறுவனத்தைப் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்கு வழங்க இணையதளம் உருவாக்கப்படவில்லை. . | ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.<br><br>இது மற்ற மாவட்டச் செயலகங்களுக்காக உருவாக்கப்பட்ட பொதுவான அமைப்பின்படி வடிவமைக்கப்பட்ட இணையதளமாகும்..மேலும் இது தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து அங்கீகாரம் மற்றும் பரிந்துரை கிடைத்தவுடன் இணையதளத்தில் இந்த ஆண்டில் மேலும் அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். |
| 0 6 | நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளத்தில் பொதுமக்கள் புகார்கள் அல்லது பாராட்டுக்களை பதிவு செய்வதற்கான வாய்ப்பை வழங்கத் தவறியமை. | இணையதளத்தில் பொதுமக்கள் புகார்கள் , பாராட்டுக்கள் அல்லது சான்றுகளை உள்ளிடுவதற்கு வழி இல்லை.<br>எனினும் ,சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளின் தேவை மற்றும் முக்கியத்துவத்தைக் கருத்திற் கொண்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தின் இணையதளத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட செயலகத்தின் தகவல் தொழிநுட்ப பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. | திருகோணமலை மாவட்ட செயலகத்தின் இணையதளத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 0 7 | ஜனவரி24,.2018 திகதியிட்டபொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய மனித வளத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | அத்தகைய தனித்திட்டம் தயாரிக்கப்படவில்லை.மாவட்ட திறன் மேம்பாட்டுப் பிரிவு தேவையான திறன்களை வழங்கி வருகின்றது. | 04 பிரிவிற்கு உரிய சிரேஸ்ட அலுவலர் மனிதவளத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். |
| 0 8 | ஒவ்வொரு | 2020ஆம் ஆண்டு வரை அமைச்சு | 02/2018 சுற்றறிக்கையின்படி |

| | பொதுக்கணக்கு குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கை | தற்போதைய முன்னேற்றம் |
|---|---|---|---|
| | ஊழியருக்கும் ஆண்டுக்கு ஆகக் குறைந்தளவு 12 மணிநேரம் மேலதிக பயிற்சி வழங்கப்படவில்லை. | வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும்ஒதுக்கீடுகளின் படி அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.<br><br>கோவிட் தொற்றுநோயின் பரவல் காரணமாக 2021 மற்றும் 2022 ம் ஆண்டுகளில் அலுவலர்கள் ஒன்றுகூடுவது ஆபத்தானதாகக் காணபட்டதால் பயிற்சி மட்டுப்படுத்தப்பட்டது. | மனிதவளத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் அலுவலர்களுக்கு இயலுமை மற்றும் திறன் பயிற்சி திட்டங்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| 09 | முழு அலுவலர்களையும் உள்ளடக்கிய வகையில செயல்திறன் உடன்படிக்கை வரைவு செய்யப்படவில்லை. | தேவையான தொகுதிகள் மற்றும் படிவங்கள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன மேலும் செயல்திறன் உடன்படிக்கை தயாரித்தல் மற்றும் கையெழுத்திடுவதில் தாமதம் குறித்து அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயல்திறன் உடன்படிக்கைகளுக்கான சுற்றறிக்கைகளின்படி அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான தொகுதிகள் மற்றும் படிவங்கள் வழங்கப்பட்டுஅதன்படி உடன்படிக்கைகளைத் தயாரிக்குமாறு அவர்களுக்குத தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 10 | மனித வளத்திட்டத்தை உருவாக்க ,மற்றும் இயலுமை ,திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த சிரேஷ்ட அதிகாரியை நியமிக்கவில்லை. | இந்த பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு மாவட்ட மேலதிக செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | மாவட்ட மேலதிக செயலாளர் இந்த நடவடிக்கைகளை மேற்பார்வை செய்கின்றார். |
| 11 | 50%க்கும் குறைவான திட்மிடப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. | கோவிட் நோய் ,வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் அலுவலர்கள் கூடுவது ஆபத்தானது போன்ற காரணங்களால் பயிற்சி நடத்துவது மிகவும் குறைவானதாகவே காணப்பட்டது. | நிதி சிக்கல்களுக்கு உட்பட்டவகையில் தேவையான பயிற்சிகள் வழங்கப்படும். |
| 12 | அடையாளம் காணப்பட்ட இலக்குகளின் விபரங்கள் 15 ஜனவரி,2019க்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதியுடன் அமைச்சுக்கு அனுப்பப்படவில்லை. | வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டு பொதுநிர்வாக,உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட போதிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு பிரதி அனுப்பப்படவில்லை. | தொடர்புடைய செயல் திட்டத்தின் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு விரைவில் அனுப்பப்படும். |

………………….. 
மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை

B.H.N.Jayawickrama
Government Agent & District Secretary
Trincomalee

ச.பரமேஸ்வரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை

…………………….
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
திருகோணமலை

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Neel Bandara Hapuhinne
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
Home Affairs Division

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக் குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2023 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவ மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)
பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.